மனத்தூய்மை (இக்ஹ்லாஸ் إِخْلَاصٌ)

பனூ இஸ்ராயீல் சமூகத்தினர்களில் இறையச்சம் கொண்டு உலக ஆசைகளைத் துறந்து வாழ்ந்துவந்த ஒருவருடைய கதை உண்டு. அவரிடம் மக்கள் வந்து சற்று தூரத்தில் சிலர் வாழ்கின்றார்கள், அவர்கள் அல்லாஹ்வை விட்டு ஒரு மரத்திற்குப் பூஜை செய்து வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒரு இறைநேசர், இந்த மக்கள் இவ்வாறு இணைவைப்பதைத் தடுக்க ஏதும் வழிவகைசெய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர் அந்த மரத்தையே வெட்டிவிட்டால் அதற்கான வாய்ப்பே இல்லாது போகும் என்று நினைத்து ஒரு கோடாரியை எடுத்துக்கொண்டு அதனை வெட்டிவிடுதவற்காகச் சென்றார். சிறிது தூரமே சென்றிருப்பார் வழியில் இப்லீஸ் ஒரு மனிதனுடைய வடிவத்தில் வந்து, இறைநேசரே, கோடாரியை எடுத்துக்கொண்டு எங்கு சென்றுகொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டான். அவர் கூறினார், அந்த மரத்தைவெட்டுவதற்காக, மக்கள் அதனை வணங்கிக்கொண்டிருக்கின்றனர். இப்லீஸ் மரத்தை வெட்டவேண்டாம் என்று அவரைத் தடுத்தான். பேச்சு வளர்ந்து இருவரும் சண்டையிட ஆரம்பித்தனர், இறைநேசர் இப்லீஸைத்தோற்கடித்துவிட்டார். இப்போது இப்லீஸ் தன்னுடைய வித்தையை மாற்றிக்கொண்டான், கூறினான், நீங்கள் இந்தக்காட்டில் தனியாக ஏழ்மையான வாழ்கையை மேற்கொண்டிருக்கிறீர்கள். நான் தினமும் உங்களுக்கு இரண்டு தீனார்கள் அன்பளிப்பாக அளிக்கிறேன், நீங்களும் கவலையற்று உங்கள் மடத்தில் சுகமாக வாழுங்கள், இந்த மரத்தை விடுங்கள் இதில் பல சிக்கல்கள் உள்ளன என்றான். அந்தப் பெரியார் இப்லீஸின் ஆலோசனையை ஏற்று தன் மடத்திற்குத் திரும்பி வந்துவிட்டார். முதல் இரண்டு நாட்கள் சொன்னபடியே இப்லீஸ் இரண்டு தீனார்களை அளித்தான். மூன்றாம் நாள் அன்பளிப்பு வராததால் கோபம் கொண்டு மரத்தை வெட்டியே தீருவேன் என்று மீண்டும் கோடாரியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். வழியில் இப்லீஸ் மீண்டும் சந்தித்து அவரைத் தடுத்தான். அவர் நிற்கவில்லை, இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. இந்த முறை இப்லீஸ் அந்தப் பெரியாரைத் தாக்கி கீழே தள்ளிவிட்டான். தோல்வியடைந்த பெரியவர், முன்பு நான் உன்னை வீழ்த்தினேன், ஆனால், இந்த தடவை எவ்வாறு நீ என்னைத் தோற்கடித்தாய்? இப்லீஸ் கூறினான், காரணம் தெளிவானதாகவே உள்ளது, முதல்முறை நீங்கள் மனத்தூய்மையுடன் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகவே என்னுடன் போராடினீர்கள், ஆகவேதான் வெற்றிக் கண்டீர்கள். ஆனால், இந்த தடவை உங்களுடைய சண்டை அல்லாஹ்வுக்காக இல்லை, உங்கள் ஆதாயத்திற்காகவே இருந்தது. ஆகவேதான், நான் ஜெயித்துவிட்டேன், நீங்கள் தோல்விகண்டீர்கள்.

www.uzairfalahi.com

ஹஜ்ரத் உம்மு ஃகைஸ் (ர) அவர்கள் மக்காஹ்வைவிட்டு மதீனாவிற்கு ஹிஜரத் செய்து வந்தபோது அவரை மணந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஒருவர் தானும் மக்காஹ்வைவிட்டு மதீனாவில் குடியேறினார். அவர் இடம்பெயர்ந்தது மார்க்கத்திற்கு உதவி செய்யவோ அல்லது முஸ்லிம்களுக்கு ஆதாரவானதாகவோ இருக்கவேண்டும் என்ற நோக்கத்தினாலோ இல்லை, ஆகவேதான் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّمَا الأَعمَالُ بِالنِّيَّات، وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَّا نَوى، فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَى اللهِ وَرَسُوْلِهِ فَهِجْرَتُهُ إِلَى اللهِ وَرَسُوْلِه، وَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَى دُنْيَا يُصِيْبُهَا أَوْ إِمْرَأَةٍ يَنْكِحُهَا، فَهِجْرَتُهُ إِلَى مَا هَاجَرَ إِلَيْهِ (متفق عليه)

பொருள்:*அமல்களின் அந்தஸ்தும் நிலையும் அதனைச் செய்வதற்கான நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டது. ஒவ்வொரு மனிதனும் அவன் எதற்காக நிய்யத்து செய்கிறானோ அதனையே பெறுவான். யார் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்காக ஹிஜரத் செய்வார்களோ அவர்களுடைய ஹிஜரத் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்காகவே செய்யப்பட்டதாகும். யார் உலக ஆதாயங்களுக்காக ஹிஜரத் செய்வார்களோ அதனை அவர்கள் பெறுவார்கள் அல்லது ஒரு பெண்ணை நாடி ஹிஜரத் செய்தால் அவளை மணந்து கொள்ளலாம். ஆகவே, அவனுடைய ஹிஜரத் அவன் எதற்காக மேற்கொண்டானோ அதற்கானதாகவே கருதப்படும்.*

www.uzairfalahi.com

இக்ஹ்லாஸ் என்றால் என்ன?

இக்ஹ்லாஸ் என்பது ஒரு மனிதன் ஒவ்வொரு செயலையும் அல்லாஹ்வுக்காகவும் அவனுடைய திருப்பொருத்தத்திற்காவும் மட்டுமே செய்வதாகும். இதில் மக்களுக்குக் காண்பிக்கவோ மக்கள் பார்க்கவேண்டும் என்பதோ குறிக்கோளாக இருக்கக்கூடாது. இந்த இக்ஹ்லாஸ்தான் அனைத்து அமல்களின் உயிர்நாடியாகும். ஒவ்வொரு முஸ்லிமும் தான் செய்யும் அமல்களில் முதலில் தன்னுடைய நிய்யத்தை (நோக்கத்தை) சீரானதாக ஆக்கிக்கொள்ளவேண்டும். அல்லாஹ்வை அஞ்சி அவனை நேசிக்கும் வகையில் செயல்படும் அமல்கள்தான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காகவோ அல்லது காட்டிக்கொள்ளும் வகையிலோ செய்யும் அமல்களை அல்லாஹ் ஏற்றுக்கொள்வதே இல்லை. இதனையே இக்ஹ்லாஸ் என்று கூறுவார்கள். திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

وَمَآ أُمِرُوٓاْ إِلَّا لِيَعۡبُدُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ ﴿٥﴾ (الزّمر:3)

பொருள்: *தங்கள் தீனை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கியவர்களாக முற்றிலும் ஒருமனப்பட்டவர்களாக அல்லாஹ்வுக்கு அடிபணிய வேண்டும் என்பதைத்தவிர வேறு கட்டளை எதுவும் அவர்களுக்கு இடப்படவில்லை.*

மற்றொரு இடத்தில் கூறியுள்ளான்: (الزمر:3) ﴿أَلَا لِلَّهِ ٱلدِّينُ ٱلۡخَالِصُۚ ﴿٣﴾ பொருள்: *அறிந்துகொள்ளுங்கள், தூயமனதுடன் கீழ்ப்படிவது முற்றிலும் அல்லாஹ்வுக்கே உரித்தான ஒன்றாகும்.* இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: (النسائي) إِنَّ اللهَ لاَ يَقْبَلُ مِنَ الْعَمَلِ إِلاَّ مَا كَانَ لَهُ خَالِصاً، وابْتُغِيَ بِهِ وَجْهُهُ பொருள்: *எந்த அமல் அவனுக்காக மட்டுமே செய்யப்படுகின்றதோ, மேலும், எதனைக் கொண்டு அவனுடையதிருப்பொருத்தம்நாடப்படுகின்றதோ அந்தஅமலை (செயலை) மட்டும் அல்லாஹ் தஆலா ஏற்றுக்கொள்கிறான்.* (நிசாயி). ஒரு மனிதன் அவன் வியாபாரியாக இருக்கட்டும் அல்லது சாதாரண கூலி வேலை செய்பவனாகவும் இருக்கட்டும், அறிஞனாகவோ மாணவனாகவோ அல்லது எவனாக இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் மனத்தூய்மை (இஃக்லாஸ்) மிகவும் முக்கியமானதாகும்.

இக்ஹ்லாஸ் என்பது நபிமார்களின் பண்பாகும்

ஹஜ்ரத் மூசா (அ) அவர்களுடைய விஷயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَٱذۡكُرۡ فِي ٱلۡكِتَٰبِ مُوسَىٰٓۚ إِنَّهُۥ كَانَ مُخۡلَصٗا وَكَانَ رَسُولٗا نَّبِيّٗا ﴿٥١﴾ (مريم :51)

பொருள்: *மேலும், மூசாவைப் (அ) பற்றி இவ்வேதத்தில் உள்ளதைக் கூறுவீராக, நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் தூதராகவும் இருந்தார்.* (மர்யம்:51). இதுபோன்றே, அல்லாஹ் தஆலா இப்ராஹீம் (அ), இஸ்ஹாஃக் (அ) மற்றும் யாஃகூப் (அ) அவர்களைப் பற்றியும் கூறுகிறான்:

وَٱذۡكُرۡ عِبَٰدَنَآ إِبۡرَٰهِيمَ وَإِسۡحَٰقَ وَيَعۡقُوبَ أُوْلِي ٱلۡأَيۡدِي وَٱلۡأَبۡصَٰرِ ﴿٤٥﴾ إِنَّآ أَخۡلَصۡنَٰهُم بِخَالِصَةٖ ذِكۡرَى ٱلدَّارِ

﴿٤٦﴾ وَإِنَّهُمۡ عِندَنَا لَمِنَ ٱلۡمُصۡطَفَيۡنَ ٱلۡأَخۡيَارِ ﴿٤٧﴾ (ص: 45 – 47)

பொருள்: *மேலும், நம்முடைய அடியார்களான இப்ராஹீம் (அ), இஸ்ஹாஃக் (அ), யாஃகூப் (அ) ஆகியோரை நினைவுபடுத்துவீராக. அவர்கள் மிகுந்த செயலாற்றல் கொண்டவர்களாகவும் நுண்ணோக்கு உடையவர்களாகவும் இருந்தார்கள்.* மறுமையை நினைவுகூர்வது எனும் தூய பண்பு அவர்களிடம் இருந்ததால் நாம் அவர்களைத்தேர்ந்தெடுத்திருந்தோம். நிச்சயமாக அவர்கள் நம்மிடத்தில் தேர்ந்தெடுக்கப்படட சான்றோர்களாவார்கள் (மர்யம் 45-47)

எண்ணங்களில் மனத்தூய்மை (நிய்யத்துகளில் இக்ஹ்லாஸ்)

சிலர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் ஜிஹாதில் செல்வதற்காக அனுமதி கோரினர். அது போருக்கான காலக்கட்டமாக இருந்தது, ஆனால்,

www.uzairfalahi.com

அவர்களிடத்தில் ஆயுதங்களோ சவாரிகளோ இருக்கவில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமும் அவர்களுக்கு உதவும் வகையில் எந்த ஒரு பொருளும் இருக்கவில்லை. வேறுவழியின்றி அவர்களைத் திரும்பிச்சென்று விடுமாறு கட்டளையிட்டார்கள். அவர்கள் மிகவும் கவலையும் வேதனை யும் கொண்டு கண்ணீர் சிந்தியவர்களாகத் திரும்பிச் சென்றனர். அவர்களி டம் இருந்த ஜிஹாத் மற்றும் ஷஹீதாகவேண்டும் (இறைவன் பாதையில் உயிர்த்தியாகம் செய்யவேண்டும்) என்ற பேரார்வம் மற்றும் இவ்விஷ யத்தில் அவர்களுடைய மனத்தூய்மையைக்கொண்டு அல்லாஹ் கருணை கொண்டவனாக அவர்களைப்பற்றி இறுதிநாள்வரை நினைவுகூறப் படும் வகையில் திருமறையில் பதிவுசெய்துவிட்டான். அல்லாஹ் கூறுகிறான்:

لَّيْسَ عَلَى ٱلضُّعَفَآءِ وَلَا عَلَى ٱلْمَرْضَىٰ وَلَا عَلَى ٱلَّذِينَ لَا يَجِدُونَ مَا يُنفِقُونَ حَرَجٌ إِذَا نَصَحُوا۟ لِلَّهِ وَرَسُولِهِۦ ۚ مَا عَلَى ٱلْمُحْسِنِينَ مِن سَبِيلٍ ۚ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٩١﴾ وَلَا عَلَى ٱلَّذِينَ إِذَا مَآ أَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَآ أَجِدُ مَآ أَحْمِلُكُمْ عَلَيْهِ تَوَلَّوا۟ وَّأَعْيُنُهُمْ تَفِيضُ مِنَ ٱلدَّمْعِ حَزَنًا أَلَّا يَجِدُوا۟ مَا يُنفِقُونَ ﴿٩٢﴾ (التوبة : 91—92)

பொருள்: இயலாதவர்கள், நோயாளிகள் மற்றும் ஜிஹாதில் கலந்து கொள்ள வாய்ப்பு அற்றவர்கள் ஆகியோர் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்கு வாய்மையாளர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் மீது யாதொரு குற்றமுமில்லை. இத்தகைய நன்னடத்தையுடையோரை ஆட்சே பிக்க எந்தக்காரணமுமில்லை. அல்லாஹ் பெரும் மன்னிப்பவனாகவும் கருணைபுரிபவனாகவும் இருக்கின்றான். இதேபோன்று, அவர்களாகவே உம்மிடம் வந்து தங்களுக்கு வாகன வசதி செய்துகொடுக்கவேண்டும் எனக் கோரி, உங்களுக்கு வாகனம் ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் வசதி எதுவும் இல்லையென நீர் கூறியபோது வேறு வழியின்றி அவர்கள் ஜிஹாதில் கலந்துகொள்வதற்காக சொந்தமாகச் செலவுசெய்யும் ஆற்றல் பெற்றிருக்க வில்லை என்ற துயரத்தில் கண்களில் கண்ணீர் சிந்தியவர்களாக திரும்பிச் சென்றனர் (அவர்கள் மீதும் எந்தக் குற்றமும் இல்லை என்று இவர்களைப் பற்றி திருக்ஃகுர்ஆனில் பதிவு செய்துள்ளான்)

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஜிஹாத் செய்வதற்காக மதீனாவிலிருந்து புறப்பட்டுச்சென்றபோது நபித்தோழர்களைப்பார்த்து கூறினார்கள்:

إِنَّ أَقْوَاماً بِالْمَدِيْنَةِ خَلْفَنَا، مَا سلكْنَا شِعْباً وَلاَ وَادِياً إِلاَّ وَهُمْ مَعَنَا فِيْهِ، حبسَهُمْ الْعُذْرُ

பொருள்: மதீனாவில் சிலர் தங்கிவிட்டுள்ளனர், இருப்பினும், நாங்கள் கடந்துசெல்லும் மலைக்கணவாய்கள் மற்றும் மலையடிவாரங்களிலெல் லாம் அவர்கள் எங்களுடனே இருக்கின்றார்கள், அவர்களை இயலாமை யான காரணங்கள் தடுத்து நிறுத்திவிட்டன.

www.uzairadani.com

வணக்கங்களில் (இபாதத்துகளில் இக்ஹ்லாஸ்) மனத்தூய்மை

ஒரு அடியாருடைய அனைத்து வணக்கச் செயல்களும் அல்லாஹ்வை அடி பணிந்து நடக்கும் நற்காரியங்கள் அனைத்துமே ஒரு நிபந்தனையின் அடிப்படையில்தான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அதுதான் அல்லாஹ் வுக்காக மட்டுமே செய்யப்படவேண்டும் என்பதாகும். ஆனால், அவற்றில் சிறிதும் மற்றவர்களுக்கான எண்ணம் ஏற்பட்டுவிட்டாலும் அது ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஹதீத்ஸ் ஃகுத்சியில் கூறப்பட் டுள்ளது: أنَا أَغْنَى الشُّرَكَآءِ عَنِ الشِّرْكِ،مَنْ عَمِلَ عَمَلاً أشْرَكَ فِيْهِ مَعِيْ غَيْرِي، تَرَكْتُهُ وَشِرْكَهُ பொருள்: *நான் இணைவைக்கப்படும் எவற்றைவிடவும் தேவையற்றவனாக உள் ளேன். எவர் ஒரு செயலைச்செய்து அதனை எனக்காக மட்டுமே இல்லாது எதனையும் இணைத்துவிடுவாரேயானால் நான் அதனையும் இணை வைத்ததையும் விட்டுவிடுகிறேன் (முஸ்லிம்).* ஒரு முஸ்லிம் தொழுகை யைத்தொழுவாரேயானால் அவருடைய நிய்யத்து அல்லாஹ்வின் திருப் பொருத்தத்திற்காகவே இருக்கும். அதில் நின்று ஃகியாம் செய்வது, ருகூஉ மற்றும் ஃகுஊது (அமர்வு), சஜ்தா செய்வது, அவனுடைய இறையச்சம், பணிவு ஆகியவற்றின் ஒரே நோக்கம் அல்லாஹ்வின் திருப்பொருத்த மாகவே இருக்கும். அவன் நோன்பு நோற்றால் அதற்கான பிரதிபலனை அல்லாஹ்விடமே எதிர்ப்பார்க்கிறான். அவன் ஹஜ் செய்கிறான் அல்லது ஜ்ஸகாத் கொடுக்கிறான் என்றால் தன்னுடைய இரட்சகனின் கட்டளை யைப் பின்பற்றுவதற்காகவே செய்கிறான். அவன் வாழ்வதும் மரணிப்ப தும், நிற்பதும் உட்காருவதும், அவனுடைய ஆயுள் முழுவதுமே அல்லாஹ் வின் திருப்பொருத்தத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவும் அவனைக் கீழ்ப்படிந்து நடப்பதற்காவுமே செய்கிறான். அவன் எந்தச்செயலையும் மக்கள் அவனை இறையச்சம் உள்ளவன், பயபக்தியுடையவன் என்று கூற வேண்டும் என்பதற்காகவோ, தொழுகையாளி, நோன்பாளி அல்லது ஹாஜி என்று கூறவேண்டும் என்பதற்காகவோ செய்வதில்லை.

ஜிஹாது செய்வதில் இக்ஹ்லாஸ்

அல்லாஹ்வின் பாதையில் போரிடுவது என்பது சாதாரண விஷயமல்ல, தன் உயிரையும் தியாகம் செய்யவேண்டியிருக்கும். அல்லாஹ்வின் பாதை யில் அல்லாஹ்வின் விரோதிகளான அவனுக்கு மாறு செய்பவர்களுடன் போரிடும்போது தன் குழந்தைகள் அநாதைகளாகிவிடலாம் என்பதையும் அவன் நன்கறிவான். மனிதனுடைய உயிர் விலைமதிக்கமுடியாத ஒன்று, ஆகவேதான், ஜிஹாது மிகவும் முக்கியத்துவமும் மகத்துவமும் பெறுகின் றது. இருப்பினும், இவ்வகையான போர்களில் தங்கள் உயிரையே அர்ப் பணிப்பதும் அல்லாஹ்வுக்காக மட்டுமே இல்லாதுபோனால் அதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஜிஹாது செய்வதிலும் மனத்தூய்மையும்

இக்ஹ்லாஸுடைய இல்லாதுபோனால் இவ்வளவு மகத்தான செயலும் உயிர்த்தியாகமும் அல்லாஹ்வின் பார்வையில் எவ்வித முக்கியத்துவமும் மதிப்பும் இல்லாது போய்விடுகின்றது. ஒருவர் இறைத்தூதர் ﷺ அவர் களிடம் வந்து கூறினார், இறைத்தூதரே (ஸல்) நான் ஜிஹாது செய்து அல் லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் அடைய விரும்புகிறேன், அத்துடன் மக்களும் என்னுடைய தைரியம் மற்றும் வீரத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறேன் என்றார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எந்த பதிலும் கூறவில்லை, அமைதியாக இருந்தார். அப்போது இந்த வசனம் வஹி மூலம் அருளப்பட்டது:

فَمَن كَانَ يَرْجُواْ لِقَآءَ رَبِّهِۦ فَلْيَعْمَلْ عَمَلًا صَٰلِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِۦٓ أَحَدًۢا ﴿١١٠﴾ (الكهف : 110)

பொருள்: எவர் தன் இறைவனின் சந்திப்பை எதிர்ப்பார்த்தவராய் இருக் கின்றாரோ அவர் நற்செயல்களைப் புரியட்டும். அடிபணிவதில் தன் இறை வனுக்கு யாரையும் இணையாக்காதிருக்கட்டும்

இவ்வாறே, ஒரு நாட்டுப்புற அரபி இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து கூறினார், இறைத்தூதரே ﷺ ஒருவர் போரில் கிடைக்கும் பொருட் களுக்காகப் போர் புரிகிறார், மற்றொருவர் பிரபலமடைவதற்கும் பெயர்பெற்று விளங்குவதற்காகவும் போர் புரிகிறார், மூன்றாமவர் தன்னுடைய தைரியம் மற்றும் வீரத்தைக் காட்டுவதற்காகப் போர் புரி கிறார், இவர்களில் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்பவர் யார்? இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَنْ قَاتَلَ لِتَكُوْنَ كَلِمَةَ اللهِ هِيَ الْعُلْيَا فَهُوَ فِيْ سَبِيْلِ اللهِ (متفق عليه)

பொருள்: யார் அல்லாஹ்வின் வாக்கு எப்போதும் மேலோங்கவேண்டும் என்பதற்காகப் போர் புரிகின்றாரோ அவர்தான் அல்லாஹ்வின் பாதை யில் ஜிஹாது செய்பவராவார்.

இக்ஹ்லாஸின் பிரதிபலன் மிகப்பெரியதாகும், எல்லாவற்றையும்விட முக்கியமானது என்னவெனில், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக மட்டுமே எதையும் செய்யும் முக்ஹ்லிஸான (மனத்தூய்மையுடைய) ஒரு வன் ஷைத்தானுடைய தூண்டுதல்களிலிருந்து பாதுகாக்கப்படுவான். இப்லீஸ் எனும் ஷைத்தான் தானாகவே அல்லாஹ்விடம் கூறினான்:

قَالَ رَبِّ بِمَآ أَغْوَيْتَنِى لَأُزَيِّنَنَّ لَهُمْ فِى ٱلْأَرْضِ وَلَأُغْوِيَنَّهُمْ أَجْمَعِينَ ﴿٣٩﴾ إِلَّا عِبَادَكَ

مِنْهُمُ ٱلْمُخْلَصِينَ ﴿٤٠﴾ (الحجر:39-40)

பொருள்: என் இறைவனே, நீ என்னை வழி பிறழச்செய்ததுபோன்று, நிச் சயம் நானும் உலகில் அவர்களுக்குக் கவர்ச்சிகள் ஏற்படுத்தி அவர்கள்

www.uzairfalahi.com

அனைவரையும் வழி பிறழச்செய்வேன், ஆனால், உன் அடியார்களில் எவர்களை நீ வாய்மையாளர்களாய் ஆக்கினாயோ அவர்களைத்தவிர.

மனத்தூய்மையுடன் அவனுக்காகவே நற்காரியங்களைச் செய்யும் முக்ஹ்லிஸான அடியார்களின் மகத்தான கூலியைப்பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

إِلَّا ٱلَّذِينَ تَابُواْ وَأَصۡلَحُواْ وَٱعۡتَصَمُواْ بِٱللَّهِ وَأَخۡلَصُواْ دِينَهُمۡ لِلَّهِ فَأُوْلَٰٓئِكَ مَعَ ٱلۡمُؤۡمِنِينَۖ

وَسَوۡفَ يُؤۡتِ ٱللَّهُ ٱلۡمُؤۡمِنِينَ أَجۡرًا عَظِيمٗا ١٤٦ **(النساء:146)**

பொருள்: *ஆயினும், இவர்களில் யார் பாவமன்னிப்புக் கோரியவர்களாகத் தம் செயல்களைச் சீர்த்திருத்திக்கொள்கிறார்களோ, மேலும் அல்லாஹ் வின் வேதத்தை இறுகப் பற்றிக்கொண்டு தமது தீன் எனும் நெறியை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கிக்கொள்கிறார்களோ அத்தகையோர் நம் பிக்கை கொண்டவர்களுடன் இருப்பார்கள். மேலும், இறைநம்பிக்கை யாளர்களுக்கு அல்லாஹ் மகத்தான கூலியை விரைவில் வழங்குவான்.*

இந்த இக்ஹ்லாஸின் மிகப்பெரிய எதிரி மற்றவர்கள் பார்க்கவேண்டும், காண்பிக்கவேண்டும் என்ற ஆசை. இது ஒரு தீப்பொறி போன்று மனத் தூய்மையினால் அடைந்த பலனையே எரித்து சாம்பலாக்கிவிடும். எங்கு இந்த நிலை ஏற்படுமோ அங்கிருந்து இக்ஹ்லாஸ் எனும் மனத்தூய்மை நீங்கிவிடும். மற்றவர்களுக்குக் காண்பிக்கவே செய்வது நயவஞ்சகர்களின் குணமாகும். ஏனெனில், நயவஞ்சகத்தன்மை மற்றும் மனத்தூய்மை ஒரு போதும் ஒன்றுசேர்வதில்லை. மற்றவர்களுக்குக் காண்பிக்கவே செய்யும் நயவஞ்சகர்களை அல்லாஹ் இவ்வாறு படம்பிடித்துக்காண்பிக்கிறான்:

إِنَّ ٱلۡمُنَٰفِقِينَ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَهُوَ خَٰدِعُهُمۡ وَإِذَا قَامُوٓاْ إِلَى ٱلصَّلَوٰةِ قَامُواْ كُسَالَىٰ يُرَآءُونَ ٱلنَّاسَ وَلَا

يَذۡكُرُونَ ٱللَّهَ إِلَّا قَلِيلٗا ١٤٢ **(النساء:142)**

பொருள்: *இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்றுகிறார்கள், உண்மை யில் அவனே இவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியிருக்கின்றான். இவர் கள் தொழுகைக்காக எழுந்து நின்றால் சோம்பற்பட்டுக்கொண்டே நிற் கின்றார்கள். மக்களுக்குக் காட்டிக்கொள்ளவே தொழுகிறார்கள் மேலும் அல்லாஹ்வை மிகக் குறைவாகவே நினைவுகூறுகிறார்கள்.*

ஒரு மனத்தூய்மையான முக்ஹ்லிஸான முஸ்லிமின் மனம் நயவஞ்சக, காட்டிக்கொள்ளும் தன்மை இல்லாது இருக்கும். இந்த நயவஞ்சக, காட் டிக்கொள்ளும் தன்மையின் வித்து முதலில் மனதில்தான் இடப்படுகின் றது. அங்கே அது வேர்பிடித்துவிடுமானால் அவனுடைய உடல் மற்றும் அங்கங்களின் வழியாக அது வெளிப்படும். இதிலிருந்து ஒருவர் தப்பிக்க வேண்டுமானால் முதலில் தன்னுடைய இதயத்தையே அலசிப்பார்த்து

அந்த வித்தையே அழித்துவிடவேண்டும். இறைத்தூதர் ﷺ கூறுகிறார்கள்:

إِنَّ اللهَ لاَ يَنْظُرُ إِلَى أَجْسادِكُمْ وَلاَ إِلَى صُوَرِكُمْ وَلكِنْ يَنْظُرُ إِلَى قُلُوْبِكُمْ (مسلم)

பொருள்: அல்லாஹ் தஆலா உங்கள் உடலமைப்பையோ அல்லது உங்கள் உருவங்களையோ பார்ப்பதில்லை, ஆனால், அவன் உங்கள் மனதுகளையே பார்க்கின்றான் (முஸ்லிம்)

மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்ளும் செயல் (இணைவைப்புப் போன்றதாகும்)

இறைத்தூதர் (ஸல்) கூறுகிறார்கள்:

إِنَّ أَخْوَفَ مَا أَتَخَوَّفُ عَلَى أُمَّتِيْ، الإِشْرَاكُ بِاللهِ، أَمَا إِنِّيْ لَسْتُ أَقُوْلُ يَعْبُدُوْنَ شَمْساً وَلاَ قَمَراً، وَلاَ وَثَناً، وَلكِنْ أَعْمَالاً لِغَيْرِ اللهِ وَشَهْوَةً خَفِيَّةً (إبن ماجة)

பொருள்: நான் என் உம்மத்தினர் பற்றி அதிகமாக அஞ்சிக்கொண்டிருப்பது இணைவைப்பதுபற்றி மட்டுமே. அவர்கள் சூரியனையோ சந்திரனையோ, ஏதோ ஒரு விக்கிரகத்தையோ வணங்கத் துவங்கிவிடுவார்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, அவர்கள் அல்லாஹ்வைத்தவிர மற்றவைகளுக்காகச் சில செயல்களைச் செய்வார்கள் மற்றும் மறைவான இச்சைகளுக்காகவும் செய்வார்கள் என்றே பயப்படுகின்றேன் (இப்னுமாஜா).

மற்றொரு நபிமொழியில் இறைத்தூதர் (ஸல்) கூறுகிறார்கள்:

إِنَّ أَخْوَفَ مَا أَخَافُ عَلَيْكُمْ الشِّرْكُ الأَصْغَرُ، قَالُوْا: يَا رَسُوْلَ اللهِ، وَمَا الشِّرْكُ الأَصْغَرُ؟ قَالَ: الرِّيَآءُ، إِنَّ اللهَ يَقُوْلُ "يَوْمَ يُجَازَى الْعِبَادُ بِأَعْمَالِهِمْ اذْهَبُوْا إِلَى الَّذِيْنَ كُنْتُمْ تُرَآءُوْنَ بِأَعْمَالِكُمْ فِيْ الدُّنْيَا، فَانْظُرُوْا هَلْ تُجْزَوْنَ عِنْدَهُمْ جَزَآءً

பொருள்: நான் உங்கள் விஷயத்தில் அஞ்சுவதெல்லாம் சிறிய இணைவைப்பு பற்றிய அச்சமே. கேட்டார்கள், இறைத்தூதரே ﷺ சிறிய இணைவைப்பு الشِّرْكُ الأَصْغَرُ *என்றால் என்ன? கூறினார்கள், மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்ளவே எதையும் செய்வது. மக்கள் தங்கள் செயல்களுக்கான பிரதிபலன் அளிக்கப்படும் அந்நாளில் அல்லாஹ் கூறுவான், "நீங்கள் யாருக்குக் காட்டிக்கொள்வதற்காக உலகத்தில் உங்களுடைய இந்த செயல்களையெல்லாம் செய்துகொண்டிருந்தீர்களோ அவர்களிடமே செல்லுங்கள், அங்கே உங்களுக்கு ஏதும் பிரதிபலன் உள்ளதா என்று பாருங்கள் (அஹ்மது).* இவ்வாறு மறுமை நாளன்று மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகவே செய்துகொண்டிருந்தவர்கள் அதற்கான கூலி மறுக்கப்பட்டு ஏமாற்றத்திற்கு ஆளாவார்கள்.

காட்டிக்கொள்வற்காக எதையும் செய்பவர்கள் நரகத்திலிருப்பார்கள்

ஒரு போரில் இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய தோழர்களிடம் முஸ்லிம்களுடன் சேர்ந்து எதிரிகளோடு போரிட்டுக்கொண்டிருந்த ஒரு

வரைப்பார்த்து இன்னவர் நரகத்திற்குச் செல்வார் என்று கூறினார்கள். நபித்தோழர்கள் இதனைக்கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். அந்த மனிதரை சிலர் இவர் என்னதான் செய்கிறார் என்று பார்க்கக் கண்காணித்தனர். ஆனால், அவரோ எதிரிகளுடன் மிக்க வீரத்துடன் சண்டையிட்டு வந்தார், இதனால் நபித்தோழர்களின் ஆச்சரியம் இரட்டிப்பாகிவிட்டது. சிறிது நேரத்திற்குப்பிறகு பார்த்தபோது அவர் படுகாயம்டைந்து அதன் வலி தாங்கமுடியாமல் தன்னுடைய வாளைக்கொண்டு தாமே தற்கொலை செய்துகொண்டார். அப்போது நபித்தோழர்கள் அவரிடம் கேட்டார்கள், இந்த அளவிற்கு வீரத்துடன் போரிட்ட நீங்கள் இது என்ன செய்துவிட்டீர், அவர் கூறினார், நான் மக்களுடனான பற்று மற்றும் என்னுடைய வீரம் மக்களுக்குத் தெரியவேண்டும் என்றே போரிட்டுக்கொண்டிருந்தேன் என்றார். இறுதியில், அவர் மரணமடைந்துவிட்டார், இறைத்துதர் ﷺ அவர்களுடைய வாக்கும் உண்மையாகிவிட்டது.

இறைத்தூதர் ﷺ அவர்கள் தெளிவாகவே கூறியுள்ளார்கள், மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகவே ஒரு செயலைச் செய்பவர்களுக்கு மறுமைநாளில் முதலில் வேதனை அளிக்கப்படும். நரகத்தில் முதலில் பிரவேசிக்கக்கூடியவர்கள் மூன்று விதமானவர்கள், மார்க்க அறிஞர், கொடையாளன் (தான தர்மங்களைச் செய்பவன்) மற்றும் உயிர்த்தியாகம் செய்த ஷஹீது ஆகியோர். இவர்களெல்லாம் மனத்தூய்மையுடையவர்களாக இருக்கவில்லை. இவர்கள் உலகத்தில் மக்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகவும் நற்பெயர் பெறுவதற்காகவுமே இதனைச் செய்திருப்பார்கள்.

காட்டிக்கொள்ளும் பாங்கு இபாதத்துகளை வீணாக்கிவிடுகின்றது

இபாதத்துகளில் (இறைவணக்கம்) காட்டிக்கொள்வது நோக்கமாக இருக்குமானால், அவற்றில் மனத்தூய்மை (இக்ஹ்லாஸ்) இல்லாதிருப்பின் அவை எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும்? இது ஒரு வகையில் அல்லாஹ்வையே ஏமாற்றுவதாகும். இந்த விதமான அமல்களுக்குப் பிரதிபலன் கிடைப்பதற்குப் பதிலாக வேதனையே கிட்டும். அல்லாஹ் கூறுகிறான்:

فَوَيْلٌ لِّلْمُصَلِّينَ ﴿٤﴾ الَّذِينَ هُمْ عَن صَلَاتِهِمْ سَاهُونَ ﴿٥﴾ الَّذِينَ هُمْ يُرَاءُونَ ﴿٦﴾ وَيَمْنَعُونَ الْمَاعُونَ ﴿٧﴾ (الماعون:4-7)

பொருள்: யார் தம் தொழுகையில் அலட்சியமாய் இருக்கின்றார்களோ அவர்களுக்குக் கேடுதான், அவர்கள் பிறருக்குக் காட்டிக்கொள்வதற்காகவே செயல்படுகின்றார்கள். மேலும், சாதாரணத் தேவைகளுக்கான பொருட்களையும் மக்களுக்குக் கொடுத்து உதவாமல் தடுத்துக்கொள்கின்றனர்.

www.uzairfalahi.com

இதுபோன்றே, மக்களுக்குக் காட்டிக்கொள்வதற்கா ஸதஃகா, தான தர்மங்கள் செய்பவர்களில் சிலருடைய நோக்கம் மக்கள் அவர்களைக் கொடையாளி மற்றும் பெருந்தன்மையானவர்கள் என்று கூறுவதற்காகவே இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு மறுமையில் எந்த பலனும் கிடைக்காது. இவர்களுடைய உதாரணம் பாறையினாலான கட்டாந்தரையைப் போன்றது. திருக்ஃகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது:

فَمَثَلُهُۥ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ تُرَابٌ فَأَصَابَهُۥ وَابِلٌ فَتَرَكَهُۥ صَلْدًا ۖ لَّا يَقْدِرُونَ عَلَىٰ شَىْءٍ مِّمَّا كَسَبُوا۟ ۗ **(البقرة:264)**

பொருள்: அவனுடைய உதாரணம் மண் மூடிய வழுக்குப்பாறையைப் போன்றதாகும். அதன்மீது பெருமழை பெய்து அதை வெறும் பாறையாக்கிவிட்டது. இத்தகையவர்கள் செய்யும் தானதர்மங்களில் எதையும் (எந்த நன்மையும்) ஈட்டமுடியாது. (அல் பஃகரஹ்:264)

எந்த அமல்கள் அல்லாஹ்வுக்காக மட்டுமே செய்யப்படவில்லையோ அவை நற்செயல்கள் அல்ல, மாறாக, அவை ஒரு கேடுதான். இதனால் எந்த பலனும் இருக்காது. அவை எந்த மதிப்போ முக்கியத்துவமோ பெறுவ தில்லை. இவை வெறும் தூசியைப்போன்றவை, மென்காற்றும் அவற்றை அடித்துச்சென்றுவிடும், காற்றில் தூற்றப்பட்டு அடையாளம் தெரியாமல் போய்விடும். அல்லாஹ் கூறுகிறான்:

وَقَدِمْنَآ إِلَىٰ مَا عَمِلُوا۟ مِنْ عَمَلٍ فَجَعَلْنَٰهُ هَبَآءً مَّنثُورًا ﴿٢٣﴾ **(الفرقان :23)**

பொருள்: மேலும், அவர்கள் செய்த செயல்கள் எதுவாக இருந்தாலும் அதைப் புழுதியாக்கிப் பறக்கவிட்டுவிடுவோம் (அல்ஃபுர்ஃகான்: 23).

* * *

www.tamilfalahi.com